1973 ஆகஸ்ட் 13]

Administration of Elementary Schools

* 101 *Q*.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal to constitute an autonomous Board for Education in the State for the administration of all elementary schools; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இப்பொழுது இந்த வாரிய அமைப்பு நிர்வாகம் செம்மையாகச் செயல்படுவதற்கு வசதியாக இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட வாரியத்தை அமைப்பதற்கு அரசு இனியாவது யோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது ஆலோசனை கூறுகின்ற அளவுக்கு ஒரு வாரியம், போர்டு, இருந்து கொண்டு வருகிறது. அதிலே பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் தலைவராக இருக்கிறார்கள். பல்கலைக் கழகப் பிரதிநிதிகளும், தொழில் நுட்பப் பிரதிநிதிகளும் பல்வேறு நிர்வாகங்களுடைய பிரதிநிதிகளும், ஆசிரியர்களுடைய பிரதிநிதிகளும் இதில் இருக்கிறார்கள். அந்த வாரியம் ஆலோசனை கூறுவதற்காக இப்பொழுது இருக்கிறது. நிர்வாகப் பொறுப்பு முழுவதையும் அவர்களிடத்திலே விட்டுவிடுவோமானால், அரசாங்கத்திற்கும் அதற்கும் தொடர்பு இருக்காது என்பது மட்டுமல்லாமல், சட்டமன்றத்திற்கும் அதற்கும் தொடர்பு இருக்காது. சட்டமன்ற உறுப்பினர்கள் வாதிட, கொள்கையைப் பற்றிக் குறிப்பிட நடைமுறையில் வாய்ப்பிருக்காது. அப்படி அமைத்தாலும், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகளின்கீழ் உள்ள பள்ளிகளைத்தான் சேர்ப்பிக்க முடியுமே தவிர, சிறுபான்மையோர் பள்ளிகளை, தனியார் பள்ளிகளை, அதில் சேர்ப்பிக்க இப்பொழுது விதிமுறைகளில் வழிமுறை இல்லை.

இங்கே இப்பொழுதிருக்கிற நிலைமையே போதுமானது. இப்பொழுதிருக்கிற வாரிய அமைப்பே போதுமானது என்று கருதுகிறோம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, வாரியம் அமைக்கப்படாவிட்டாலும், இன்றைக்கு இருக்கிற பள்ளிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, ஒரே நிர்வாகத்தின்கீழ் கொண்டு வருவது குறித்து அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசாங்கமே அமைத்தாலும் ஊராட்சி ஒன்றியம், நகராட்சி மன்றங்கள் நடத்துகின்ற பள்ளிகளைத்தான் சேர்க்க முடியும். அரசாங்கம் நடத்துகிற பள்ளிகளைத்தான் சேர்க்க முடியும். சிறுபான்மையோர் நடத்துகிற பள்ளிகளை, தனியார் நடத்துகிற பள்ளிகளை நாம் வலுக் கட்டாயமாகச் சேர்க்க இயலாது. அதையெல்லாம் கட்டுப்படுத்தத்தான் இப்பொழுது மசோதா ஒன்று செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த மசோதா வந்த பிறகு, ஓரளவுக்கு எல்லோரையும் கட்டுப்படுத்தி, நிர்வாகத்தைச் செம்மைப்படுத்துகிற சூழ்நிலை ஏற்படும். ஆகவே தான் போர்டு அமைக்கிற சூழ்நிலை இல்லை.

Teachers for B.Com., courses

* 102 *Q.*—THIRU **N. DENNIS** : Will the Hon the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the Government are aware of dearth of qualified teachers for B.Com., in this State; and

(**b**) if so, the remedial steps taken thereon ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) **&** (இ) : பீ. காம்., வகுப்புகளை நடத்தப் போதிய பட்டதாரிகள் உள்ளதால், " பீ. காம். வகுப்பு நடத்த ஆசிரியர்கள் இல்லை " என்ற குறைக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, பீ. காம். படிப்பதற்கு, பெண்களுக்குப் போதுமான அளவு வசதி அளிக்கப்படவில்லை. போதுமான அளவு பெண் ஆசிரியர்களும் இருப்பதாகத் தெரியவில்லை. இக் குறையைப் போக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.